NEWBEC
NEW WAY OF BEING CHURCH | இறை இரக்கத்தின் ஞாயிறு | 27 ஏப்ரல் 2025
எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்

மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:

சமுதாயம் - நல்லிணக்கத்தை நோக்கிய அழைப்பு

# நம்பிக்கையோடு என்னிடம் திரும்பி வாருங்கள்




T நம்பிக்கையாளர்களின் உள்ளங்களை "அறிவுக்கு" கொண்டு வந்த தோமாவின் ஐயத்தை நாம் இன்று உறுதிப்படுத்துகிறோம். தோமாவின் முழுமையான மனமாற்றம் அவரை இயேசுவின் தெய்வீகத்தன்மையை ஏற்றுக்கொள்ளவும், அன்புடன் அறிக்கையிடச் செய்யவும் வழிவகுத்தது. அவரை "நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்" என்று அழைத்தது. யோவானின் இந்தப் (யோவான்:11:8) பகுதியை நாம் நினைவுகூருவோம். இயேசு யூதேயாவுக்கு செல்வதாகத் தம் சீடர்களிடம் தெரிவித்தபோது, அவர்கள் அவரைத் தடுக்க முயன்றனர். ஆனால் தோமா பின்வாங்கவில்லை. அவர் துணிவோடு அறிவித்தார்.

"நாமும் செல்வோம், அவரோடு இறப்போம்" கடவுள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இதுபோன்ற ஐயப்பாட்டுடன் செயல்படுகிறார். நாமும் சில நேரங்களில் ஐயம் கொள்கிறோம். நம்பிக்கையின்மையைப் பல நேரங்களில் காட்டுகிறோம். இருப்பினும் தோமாவின் ஐயம் அவரை இந்தியாவில் துணிவோடு நற்செய்தி அறிவிக்கவும், மறைசாட்சியாக இறக்கவும் அனுமதித்தது. இயேசு தோமாவோடு எப்போதும் நெருக்கமாக இருந்தார். இயேசு சிறிய நம்பிக்கையோடு வாழ்பவர்களுக்கும் கூட நெருக்கமாக இருக்கிறார்.

கிறிஸ்துவை புனித பேதுருவும் மறுத்தார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். சீடத்துவம் மிக முக்கியமானது என்றபோதிலும் கூட அவர் ஓடிவிட்டார். இருந்தபோதும், இயேசுவைப் பின்பற்றியவர்களைக் கடவுள் தொடவும், குணப்படுத்தவும் பேதுருவின் நிழல் கூட ஒரு கருவியாக இருந்தது என்று நாம் வாசிக்கிறோம். புனித பேதுரு மந்தையைப் பிறரோடு சேர்ந்து வழிநடத்தி, மாபெரும் அருளடையாளங்களைச் செய்தார். நம்முடைய வாழ்வில் பலவீனமான தருணங்களுக்கு மத்தியில் இயேசுவின் வியக்கத்தக்க அருளடையாளங்கள் நிகழ்வதைப் பார்ப்பது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. நாம் பலவீனமாக இருக்கும்போது தான், அவர் வலிமைமிக்கவர். இது நம் அனைவரின் வாழ்க்கையிலும் மீண்டும் மீண்டும் எடுத்துக்காட்டப்படுகிறது.

இறை இரக்கத்தின் ஞாயிறைக் கொண்டாடும் இன்று, தனது நாட்குறிப்பில் புனித ஃபாஸ்டினா இதுபோன்று ஆண்டவரை எதிர்கொள்ளும் சந்திப்புகளை எழுதிவைத்து நமக்குக் கற்பிக்கிறார். அவநம்பிக்கை, ஐயம் கொண்டுள்ளோர், நம்பிக்கையில்லாதோர் மத்தியிலும் கடவுள் எவ்வாறு செயல்படுகிறார் என்பதை அவர் நமக்குக் காட்டுகிறார். இயேசுவைப் பற்றி அவர் இவ்வாறு எழுதுகிறார். "அன்பும் இரக்கமும் நானே, எந்த ஆன்மாவும் என்னை நெருங்கிவர பயப்படவேண்டாம்" ஈஸ்டர், நம்மை இயேசுவிடம் நெருங்கிவர வலியுறுத்துகிறது. இது பாஸ்கா மறையுண்மையின் மூலம் நமது மீட்பைப் பற்றிய புரிதல். உடைந்துபோன இந்த உலகில், நாமும் பல முறை நம்பிக்கை இழந்திருக்கிறோம். அல்லது குருடாக்கப்பட்டுள்ளோம். தெய்வீக இரக்கம் நம்மை வெளிப்படையாக மீண்டும் அழைக்கிறது. **தெய்வீக இரக்கம் நாம் இருக்கும் நிலையிலேயே மீண்டும் வந்து அவரை நோக்கி அழைக்கும்படி கேட்கிறது.** மேலும், உறுதியாக சொல்லுங்கள் "இயேசுவே நான் உம்மை நம்புகிறேன், ஆசீர்வாதமான இறை இரக்கத்தின் ஞாயிறு.

> நான் மக்களுக்கு ஒரு பாத்திரத்தை வழங்குகிறேன். அதைக் கொண்டு அவர்கள் இரக்கத்தின் ஊற்றின் அருளுக்காகத் தொடர்ந்து வரவேண்டும். அந்தப் பாத்திரம் "இயேசுவே நான் உம்மை நம்புகிறேன்" என்னும் கையொப்பத்துடன் கூடிய இந்த திரு உருவம்.
>
> புனித ஃபாஸ்டினா நாட்குறிப்பு, 327

**இன்றைய இறைவார்த்தை:**

திரு.ப 5: 12-16

திருப்பாடல்: 118: 2-4, 22-27

தி.வெ. 1: 9-13, 17-19

யோவான் 20: 19-31

INTERNAL CIRCULATION ONLY
BUL 17/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org